# தமிழ் மொழியும் இலக்கியமும்
## தரம் 10, 11
## இலக்கியத்தொகுப்பு

## அலகு 05
## கம்பியூட்டர் சிறுகதை



## வினா விடைத்தொகுப்பு

கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது

தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்

"முடியுமா என்பது மூடத்தனம் முடியாது என்பது கோழைத்தனம் முடியும் என்பதே மூலதனம்"

No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914

அலகு 05

# கம்பியூட்டர் - சிறுகதை

- கம்பியூட்டர் சிறுகதையின் ஆசிரியர் - அ. முத்துலிங்கம்
- கம்பியூட்டர் சிறுகதை இடம்பெற்றுள்ள நூல் - வடக்கு வீதி

1. **“ நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா..”** **( O/L 2016 01. VII )**

அ. தலபுராணம் என்பதன் கருத்து யாது?

தலம் ஒன்றின் மகிமையை, பெருமையை பற்றி கூறப்படுவது.

ஆ. தலபுராணம் என்பது இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் பற்றிய முழு விபரமும் தெரிந்தவர்

2. **“ஒரு முறை கவி காளமேகம் பாஷை தெரியாத திம்மி என்கிற தாசியுடன் இரவைக் கழிக்க வேண்டி வந்ததாம்..”**

அ. இங்கு இடம்பெற்றுள்ள புலவரின் பெயர்?

காளமேகப்புலவர்

ஆ. பாஷை என்பதன் பொருள்?

மொழி

இ. **“எமிரோவோரி எந்துண்டிவஸ்தி** என்பது யாது?

தெலுங்குச்சொற்றொடர்கள் ஆகும்

3. **“ முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையை கண்டுபிடித்தேன் கணிப்பொறி என்பது ஒரு இராட்சத வேலைக்காரன்.. ”**

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

கதையாசிரியாரால்/ அரவிந்தனின் தந்தையால்

ஆ. இராட்சதம் என்பதன் கருத்து?

மிகக் கடினமான, கொடுமையான, பயங்கரம்

4. **“அரவிந்தா, அரவிந்தா இங்க வா என்று யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல ஓலமிடுவாள்.. ”**

அ. இக்கூற்றைக் கூறியது யார்?

அரவிந்தனின் அம்மா மேகலா

ஆ.யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல.. எனும் அடி வெளிப்படுத்தும் கருத்து யாது?

கஜேந்திரன் எனும் யானை விஷ்ணுவை அழைத்தமை. (அதாவது முதலை வாய் அகப்பட்ட கஜேந்திரன் தன்னை விடுவித்துக் கொள்ள அனைத்திற்கும் ஆதியாகிய திருமாலை “ஆதிமூலமே சரணம்” என அபயம் எழுப்பியது)

5. **“ இருதுபர்ணன் என்ற அரசன் தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்தில் கலந்து கொள்ள தேரில் விரைகின்றான்... ”**

அ. இவ்வடிகளில் வெளிப்படும் இலக்கியம் எது? அதன் ஆசிரிய யார்?

நளவெண்பா புகழேந்திப்புலவர்

6. **“ இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக்கலையில் கைதேர்ந்ததாக இருந்தது...”**

அ. அட்ச இருதயக்கலையுடன் தொடர்புடையவன் யார்?

இருதுபர்ணன்

ஆ. அட்ச இருதயக் கலை என்றால் என்ன?

ஒரே தடவையில் பலவற்றை எண்ணுகின்ற கலை/ ஆற்றல்

**7. “ என்னுடைய மகன் குவளை மலர்போன்ற கரு நீலக்கண்களை இன்னும் அகல விரித்து.. ”**

அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

உவமைணி

ஆ. இங்கு மகன் என விளிக்கப்பட்டவன் யார்?

அரவிந்தன்

**8. “ விட்டிராதே விட்டிராதே பிடி என்று கத்தினேன்.. ”**

ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

அரவிந்தனின் தந்தையால் அரவிந்தனுக்கு-

தொலை எனும் கதை அரவிந்தனின் விபரப்புத்தகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டபோது.

**9. “ என்னம்மா, நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீர்கள்.. ”**

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

அரவிந்தனால் தாய் மேகலாவுக்கு

ஆ. ட்ரபிள் என்பது குறித்து நிற்கும் பொருள் ?

இடையூறு, இடைஞ்சல்

**10. “ இந்தப் பைல் இஞ்ச எப்பிடி வந்தது...”** **( O/L 2018 01. IX )**

அ. பைல் என்பதன் தமிழ் வடிவம் யாது?

கோவை

ஆ. **“இஞ்ச எப்பிடி”** எனும் சொற்றொடரின் எழுத்து வடிவம் யாது?

இங்கு எப்படி அல்லது இங்கே எப்படி

இ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

அரவிந்தனின் தந்தையால் மகனுக்கு

**11. “இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம்..** இங்கு சந்தி பிரிக்காத பாடல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

புரிந்து கொள்வதற்கு கடினமாக இருத்தல்.

**12. 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்..** **( O/L 2019 01. IX )**

அ. இதில் இடம்பெற்றுள்ள பிரபந்தம் எது?

பரணி

ஆ. உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

உச்சரித்தல்/ மனப்பாடம் செய்தல்

இ. பரணி என்பதால் கருதப்படுவது யாது?

ஆயிரம் யானைகளை அடக்கி வெற்றி பெற்ற வீரனைக் குறித்துப் பாடப்படுவது.

**13. கதாசிரியருக்கு கணிப்பொறி செய்த நம்பிக்கைத் துரோகம் யாது?**

அவர் 6000 வார்த்தைகளுக்கு மேல் 36 பக்கங்களில் அடித்து சேமித்துவைத்த கதை தொலைந்து போனபோது எத்தனைமுறை தேடியும் கிடைக்காதது.

**14. மீண்டும் கம்பியூட்டருடன் இணக்கம் ஏற்பட காரணம் யாது?**

அவர் காணவில்லை என தேடிய கதையை அரவிந்தனின் சேமிப்புப்புத்தகத்தில் இருந்து மீழுக்கிடைத்தமையாகும்

**15. இச்சிறுகதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களை குறிப்பிடுக.**

அ.முத்துலிங்கம், மனைவி மேகலா, மகன் அரவிந்தன், கடைக்காரன், அமரிக்க நண்பர், கடைக்காரப் பெண், அவரது நண்பர், அரவிந்தனின் நண்பர்கள்.



S.Rajkumar

**16. இச்சிறுகதையில் இடம்பெறும் இலக்கியங்கள் எவை?**

நளவெண்பா - இருதுபர்ணன் கதை, காளமேகப்புலவர் அனுபவம், பாக்குவெட்டியும் புலவரும் கதை

**17. " எமிரோவோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்"**

**அ. இக்கூற்று இடம்பெற்ற சிறுகதை யாது?** **( O/L 2017 01. II )**

கம்பியூட்டர் சிறுகதை

ஆ. இக்கூற்று யாருடைய கூற்று.

காளமேகப்புலவரின்

**18 இச்சிறுகதையில் இடம்பெறும் நனவோடை கதைகள் எவை?**

அமரிக்க நண்பரும் தூண்டிலும், வெலிங்டன் தியேட்டர் கதை, செவக்கொழுந்துக்கு வண்டி கட்டி வேட்டி வாங்க போன கதை

**19. கம்பியூட்டரை கதாசிரியர் ஆண் பெண் என வகைப்படுத்தியது பற்றி கூறுக.**

பழக்கத்திற்கு கொண்டுவர நீண்ட நாள் எடுப்பதும், பிகு பண்ணிக்கொண்டு இருப்பதும், ஒருவாறு வழிக்கு வந்துவிட்டால் இறுதிவரை ஒத்துளைக்கும் தன்மை கொண்டது பெண் எனவும், ஆரம்பத்தில் அதிகம் ஒத்துளைக்கும் பின்னர் காலை வாரி விடும் அப்படிப்பட்டது ஆண் கம்பியூட்டர் எனவும் வகைப்படுத்தியுள்ளார்.

## கட்டமைப்பு வினாக்கள்

**01) கம்பியூட்டர் வாங்குவதற்கான முடிவெடுத்ததற்கான காரணம் என்ன எனக் கதாசிரியர் கூறுகிறார்?**

தனது மகனாகிய அரவிந்தனின் நண்பர்களின் வீட்டிலெல்லாம் கம்பியூட்டர் இருப்பதாகக் கூறியதோடு, மனைவி மேகலா கம்பியூட்டை ஆர்மோனியப் பெட்டியை வளைப்பதுபோல் வளைத்து விடலாம் என ஆர்வமாக இருந்தமையும்.

**02) கம்பியூட்டர் சிறுகதையில் இடம்பெறும் நனவுகளும், இலக்கியப் பகுதிகளும் எடுத்துக்காட்டப்பட்ட சந்தர்ப்பங்களை விளக்குக?**

- நியூயோக்கில் தூண்டில் வாங்கப்போய் பட்ட பாடு பற்றி யோசித்த சந்தர்ப்பம்
  1. கணிணி பற்றித் தெரியாமல் முதன்முதலில் கணிணி வாங்குவதற்காகச் சென்ற வேளை கடைக்காரன் பேசிய விடயங்கள் விளங்காதபோது

**( O/L 2020 07.ஆ)**

- டிக்கட் வேண்டாம் கையை விடு என வெலிங் தியேட்டரில் கூறிய கதை
  2. தூண்டில் வாங்கப்போய் அங்கு மாட்டிக் கொண்டு நின்ற போது, இவ்வாறு நினைத்ததாக கணிணி வாங்கச் சென்ற இடத்தில் வைத்து, நினைத்தது.
- காளமேகப் புலவர் தாசி திம்மியுடன் இரவைக் கழித்த இலக்கியப்பகுதியை யோசித்த சந்தர்ப்பம்
  3. கணிணிக் கடைக்காரரும், கணிணி பற்றித் தெரிந்த தமது நண்பரும் கணிணி பற்றி உரையாடிக் கொண்டிருக்கும் போது, அது பற்றி விளங்காமல் கதாசிரியர் நின்றபோது
- சிவக் கொழுந்து 1008 வேட்டி வாங்க வண்டி கட்டிப்போன கதை
  4. நண்பர் 486 கொம்பியூட்டர் வாங்கலாம் என இதன் மொடல் நம்பரைக் கூறியபோதுஎண்ணிக்கையில் 486 என நினைத்த வேளை
- இருதுபர்ணனின் கதை பற்றிய சம்பவம்
  5. கணிணியும் இருதுபர்ணனைப் போல் அட்சய இருதயக் கலையில் சிறந்தது என நினைத்த போது
- பாக்குவெட்டி தொலைத்த ஏழைப்புலவரின் கதை
  6. தனது 'தொலை' எனும் கதை தொலைத்து விட்டு தேடித் தேடியும் கிடைக்காத சந்தர்ப்பத்தில்



S.Rajkumar

**03 கம்பியூட்டர் சிறுகதையில் கதாசிரியர் காட்டும் விழுமியம் சார் செயற்பாடுகள் எவை ?**

- ஆராத்தி எடுத்தது
- ராகு காலம் தவிர்ந்த நல்ல நேரத்தில், மேசையில் வைத்தது
- சாமிக்கு தீபம் காட்டி விட்டுவந்து கணிணிக்கு பொட்டு வைத்தது
- அரவிந்தன் ஓம்ஸ்ரீராம் எழுதியது

**04 இச் சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைத் தொடர்களை எடுத்துக்காட்டுக?**

- முட்டியில் கள்ளுப் பொங்குவது போல
- அம்மி பொளிவது போல
- வண்ணத்துப் பூச்சி பறப்பது போல
- புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல **( O/L 2019 02. V )**
- கல்லுளி மங்கன் போல
- ஆர்மானியப் பெட்டி போல
- கத்திரிக்கோல் வெட்டுவது போல
- சந்தி பிரிக்காத பாடல் போல
- மீன்குஞ்சு நீந்துவது போல
- யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல

எனவாறு உவமைத் தொடர்களை காணமுடிகின்றது.

**05 கணிப்பொறியினால் ஏற்படும் நன்மைகள் யாவை என கதாசிரியர் கூறுகின்றார்.**

இச் சிறுகதையில் கணிப்பொறி அதாவது கம்பியுட்டர் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகளாக பின்வருவனவற்றை கூறமுடியும்.

- காகிதம் மிச்சமாகும்
- சுற்றுச்சூழலுக்கு நன்மை ஏற்படுகின்றது
- திருத்தங்களை ஓரே தடவையில் மேற்கொள்ளலாம்
- சொற்பிழைகளைக் கண்டுபிடிக்கலாம், திருத்திக் கொள்ளலாம்.
- சொற்களின் எண்ணிக்கை, பக்க எண்ணிக்கை என்பவற்றை அறியலாம். பிரதி எடுக்க முடியும்
- பல செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்
- கணக்குகளை பதிவு செய்து சேமித்து வைக்கலாம்
- படங்கள் வரையலாம் அத்துடன் கேம்ஸ் விளையாடலாம்

**06. கம்பியூட்டர் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?**

கம்பியுட்டரின் வருகையினால் அவர்களது வீடு முற்றாகவே மாறிப் போய்விடுகின்றது.

- அரவிந்தன் படங்களை வரைதல், கேம்ஸ் விளையாடுதல்
- அரவிந்தனின் தாய் மேகலா வீட்டுக் கணக்கு, சீட்டுக் கணக்குகளை கணணியில் பதிந்து வைத்திருத்தல்
- கம்பியூட்டர் மொழியில் பேசப் பழகிக் கொண்டமை (மேகலாவை மெகா என்பது, உணவு கேட்கும் போது give me a mega byte என கேட்பது)
- அரவிந்தனின் நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருதல்
- அரவிந்தனின் தந்தை தொலை எனும் தலைப்பில் நீண்ட கதை ஒன்றை கம்பியூட்டரில் எழுதுதல்
- அரவிந்தன், தாய், தந்தை என பகுதி பகுதியாக பிரித்து கம்பியூட்டரைப் பயன்படுத்தல்
- புதிதாக பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவதைப் போல கம்பியூட்டரின் வருகையால் வீடு மாறியது.
- வீடே ஒரு விஞ்ஞானத்துள்ளலாக மாறியது

S.Rajkumar

**07. கதாசிரியரின் கம்பியூட்டர் பற்றிய விபரிப்பு பற்றி கூறுக. ( O/L 2016 04. அல்லது அ)**

- கம்பியூட்டரை கதாசிரியர் ஆண் பெண் என வகைப்படுத்தியது
  பழக்கத்திற்கு கொண்டுவர நீண்ட நாள் எடுப்பதும், பிகு பண்ணிக்கொண்டு இருப்பதும், ஒருவாறு வழிக்கு வந்துவிட்டால் இறுதிவரை ஒத்துளைக்கும் தன்மை கொண்டது பெண் எனவும், ஆரம்பத்தில் அதிகம் ஒத்துளைக்கும் பின்னர் காலை வாரி விடும் அப்படிப்பட்டது ஆண் கம்பியூட்டர் எனவும் வகைப்படுத்தியுள்ளார்.

- கணிப்பொறி ஒரு இராட்சத வேலைக்காரன்.
  சொல்லும் வேலைகளை கட்சிதமாக செய்துவிடும்.
  தவறான கட்டளைகள் பிறப்பித்துவிட்டால் தானே எஜமானாகி விடும்.
  பயந்து பயந்து அணுகினால் எட்டப்போய் விடும்.

**08. சிறுகதையில் பிரதான பாத்திரங்களில் குணப்பண்புகள் யாவை?**

**அ.முத்துலிங்கத்தின் குணப்பண்பு**

- கதை சொல்லியாக இடம்பெற்றிருப்பவர்
- கம்பியூட்டர் பற்றிய அறிமுகம் இல்லாதவர்
- அமெரிக்காவில் பணிப்பெண் கேட்ட கேள்விகளால் திணறிப் போனவர்
- கம்பியூட்டர் வகைகளை கண்டு ஆச்சரியம் அடைந்தவர்
- தட்டெழுத்து பொறியில் தேர்ச்சி பெற்றவர்
- தொலை எனும் தலைப்பில் நீண்ட கதை ஒன்றை கணினியில் எழுதியவர்
- கணிப்பொறி பற்றி அரவிந்தனிடம் கேட்டு அறிபவர்
- தன் நண்பரை வீட்டுக்கு அழைத்து தன் சந்தேகங்களை தீர்த்துக் கொள்பவர்.
- ஆரம்பத்தில் கம்பியூட்டருடன் பிணக்கு ஏற்பட்டு பின் அதில் இணக்கம் கொண்டவர்
- நகைச்சுவையாக கதை சொல்லக்கூடியவர்

**அரவிந்தனின் குணப்பண்பு**

- ஒன்பது வயதுடைய சிறுவனாக இடம்பெறுபவன்
- கம்பியூட்டரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவன்
- கம்பியூட்டர் மொழியில் கதைப்பவன்
- கம்பியூட்டரில் ஸ்ரீராம் எழுதியவன்
- கணிப் பொறி பற்றிய விடையங்களை தந்தைக்கு சொல்லிக் கொடுப்பவன்
- கணிப் பொறியில் படங்கள் வரைபவன், கேம்ஸ் விளையாடுபவன்
- பள்ளி வேலைகளை கணினியில் செய்பவன்
- நவீன உலகின் பிரதிநிதியாக கதையில் இடம்பெற்றிருப்பவன். மேகலா
- கேம்ஸ்களை நண்பர்களிடம் இருந்து பண்டமாற்றாய் பெறுபவன்
- கம்பியூட்டர் பற்றி நண்பர்களுடன் பட்டிமன்றம் நடத்துபவன்
- கம்பியூட்டருடன் வாஞ்சையாய் பழகுபவன்

**மேகலாவின் குணப்பண்பு**

- கம்பியூட்டர் வாங்குவதில் விருப்பமுடையவள்
- கம்பியூட்டரை, ஆர்மோனியப்பெட்டியை வளைப்பது போல் வளைத்துவிடலாம் என நினைத்தவள்
- அரவிந்தனின் தாயாக விளங்குபவள்
- வீட்டிற்கு கம்பியூட்டர் கொண்டுவரப்படும் போது வாசலில் ஆர்வத்துடன் காத்திருந்தவள்
- தெய்வ நம்பிக்கை உடையவள், கணனியில் குங்குமப் பொட்டு வைத்தவள்
- கணிப்பொறியில் கணக்குகள் பதிந்து வைப்பவள்,
- கம்பியூட்டரில் விரைவாக தேர்ச்சி பெற்றவள்
- தனது நண்பி கேட்ட கேள்விக்கு ''கொஞ்சம் பொறு கம்பியூட்டரில் பார்த்து சொல்கிறேன்'' என பெருமையாய்கூறியவள்



S.Rajkumar

**09. கம்பியூட்டர் வீட்டிற்கு வரும் போது நடந்த நிகழ்வுகள் யாவை?**

- மனைவி மேகலா ஆலத்தி எடுப்பது போல வாசலில் காத்திருந்தாள்.
- கம்பியூட்டர் இறக்கி நல்ல காலம் பார்த்து வீட்டுற்குள் கொண்டு சென்றார்கள்.
- சாமிக்கு தீபம் காட்டி மேகலா கணினிக்கு குங்குமப் பொட்டு வைத்தாள்
- அரவிந்தன் கணினியில் ஓம் ஸ்ரீ ராம் எழுதினான்
- கம்பியூட்டரை தட்டிப் பார்த்தல், எழுதிப் பார்த்தல், அதன் மணத்தை நுகருதல். போன்றன நடைபெற்றது

**10. எழுத்தாளரையும் அவரது குடும்பத்தையும் கம்பியூட்டர் அன்னியோன்னியம் ஆக்கிய விதம் யாது? அதனை நகைச்சுவையாக சித்தரிக்கும் விதத்தினை விளக்குக.**

**(O/L 2018 03. அல்லது அ,ஆ)**

- கம்பியுட்டரின் வருகையினால் அவர்களது வீடு முற்றாகவே மாறிப் போய்விடுகின்றது. கம்பியூட்டர் மொழியில் பேசப் பழகிக் கொணடோம் எனல் (மேகலாவை மெகா என்பது, உணவு கேட்கும் போது give me a mega byte என கேட்பது)
- தனது மனைவியை அழைக்கும் போது மேகலாவை மெகா என அழைக்கையில் ச்தோசம் அடைதல்
- கம்பியூட்டர் மொழியில் பேசப் பழகிக் கொண்டபின் அன்னியோன்னியம் அதிகரித்தமை
- மகனுக்கும் மனைவிக்கும் இடையிலான உரையாடலிலும் செயலிலம் ஒருவருக்கொருவர் உதவுவதாக விபரித்தல்
- எழுத்தாளரது தொலை எனும் கதை தொலைந்து போய் மீண்டும் கிடைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சி
- கணிப்பொறியி வருகையால் வீடே ஒரு விஞ்ஞானத்துள்ளலாக மாறியது எனும் ஆசிரியரின் கூற்று

**நகைச்சுவையாக சித்தரிக்கும் விதம்**

- கணிப்பொறியை இறக்கவதை சித்தரிக்கும் விதம்
  - மனைவி மேகலா ஆலத்தி எடுப்பது போல வாசலில் காத்திருந்தாள்.
  - கம்பியூட்டர் இறக்கி நல்ல காலம் பார்த்து வீட்டுற்குள் கொண்டு சென்றார்கள்.
  - சாமிக்கு தீபம் காட்டி மேகலா கணினிக்கு குங்குமப் பொட்டு வைத்தாள்
  - அரவிந்தன் கணினியில் ஓம் ஸ்ரீ ராம் எழுதினான்
  - கம்பியூட்டரை தட்டிப் பார்த்தல், எழுதிப் பார்த்தல், அதன் மணத்தை நுகருதல். போன்றன நடைபெற்றது
- மனைவி தன் தோழிக்கு இயல்பாக அளிக்க விரும்பும் பதில்
  - தனது நண்பி கேட்ட கேள்விக்கு ‘‘கொஞ்சம் பொறு கம்பியூட்டரில் பார்த்து சொல்கிறேன்’’ என பெருமையாய்கூறியவள்
- மனைவயிடம் கம்பியூட்டர் பரிபாசையில் பேசுவது
  - Press any key to enter
  - If you want to escape press here போன்றவற்றை கூறலாம்

**11. கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவம் இன்மை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?**

- கம்பியூட்டரின் தோற்றத்தைப் பார்த்து பயப்படல் **( O/L 2020 07.அ)**
- கம்பியூட்டர் வாங்கப்போய் கடைக்காரன் கதைத்த கதை புரியாமல் நின்று பின்னர் நண்பருடன் சென்று வாங்கியமை
- நண்பருடன் சென்ற வேளையில் நண்பரும் கடைக்காரனும் கதைத்த கதை விளங்காமல் நின்றமை
- கம்பியுூட்டருக்கு ஆண் பெண் பேதம் இருப்பதாக நம்புதல்
- ‘‘486’’ எனும் நாமத்தை தவராக விளங்குதல்
- வீட்டிற்கு வந்தபின் அதனுடன் பிணக்கு ஏற்படல்



S.Rajkumar

**12 கணிப்பொறி பற்றி கதாசிரியரின் கருத்து யாது?**

- கணிப்பொறி ஒரு இராட்சத வேலைக்காரன்.
- சொல்லும் வேலைகளை கட்சிதமாக செய்துவிடும்.
- தவறான கட்டளைகள் பிறப்பித்துவிட்டால் தானே எஜமானாகி விடும்.
- பயந்து பயந்து அணுகினால் எட்டப்போய் விடும்.

**13. இச் சிறுகதையில் வெளிப்படும் நகைச் சுவை உணர்வுகளை எடுத்துக்காட்டுக?**

- கணனியில் ஆண் பெண் பாகுபாடு இருப்பதாக கூறுவதும் அதற்காக கதையாசிரியர் கூறும் விளக்கமும் நகைச்சுவை உணர்வுடையது.
- கடைக்காரனின் தோற்றத்தை கூறும் போது, அவன் தலையில் இருக்க வேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தது எனக் கூறுதல்
- அமெரிக்காவில் தூண்டில் வாங்கச் சென்ற போது கடையில் நின்ற பெண் கேட்ட கேள்விகளும் அவர் பட்ட பாடும் நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்தல்.
- அமெரிக்கா கடைக்கு தூண்டில் வாங்கச் சென்ற போது அங்கு பெண் குதி உயர் காலணியில் நறுக் நறுக்கென்று கத்தரிக்கோல் வெட்டுவது போல நடந்து வந்தாள் எனக் கூறுதல்.
- காளமேகப் புலவர் பாசை தெரியாத திம்மியோடு இரவுப் பொழுதை கழித்த சம்பவத்தை நகைச்சுவை உணர்வோடு கூறுதல்
- கடைக்காரரும், நண்பரும் உரையாடும் போது எதுவும் தெரியாமல் நின்றிருத்தல்
- கம்பியுட்டரின் வகைகளை பலவாறாக கூறும் போது நகைச் சுவை உணர்வு வெளிப்படுதல்
இவ்வாறு இச் சிறுகதையிலே அதிகமான இடங்களில் நகைச் சுவை உணர்வுகள் இழை யோடியுள்ளன. அவ்வகையில் அவை சிறுகதைக்கு வலுச் சேர்க்கின்றன எனலாம்.

**14. இச் சிறுகதையில் கம்பியூட்டர் எனும் தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி எடுத்துரைக்க?**

கலைப்படைப்பு ஒன்றின் கருத்துக்கு ஏற்ப தலைப்பு அமைவது அவசியமாகும். அவ் வகையில் கருப்பொருளுக்கு ஏற்ப நெருக்கமான தொடர்புடையதாக இத் தலைப்பு அமைந் துள்ளது. கதை முழுவதுமே கம்பியூட்டரே பிரதானமாக இடம்பெறுகின்றது இச்சிறுகதை 1998ஆம் ஆண்டு வெளியானதாகும் கம்பியூட்டர் பற்றிய அறிவு தமிழர்கள் மத்தியில் வளரத்தொடங்கிய காலம் எனலாம் இதற்கான கலைச்சொற்கள் அதிகம் பரீட்சயம் இல்லாத காலம் அது. உலகளாவிய தமிழ் வாசகர்களை கருத்திற்கொண்டு, கணிப்பொறி எனும் தமிழ்ச்சொல்லை கதையினுள்ளே பயன்படுத்தியிருக்கின்ற போதிலும் கம்பியூட்டர் எனும் தலைப்பிட்டமை பொருத்தமானது எனலாம்.

**15. சிறுகதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.?**

**( O/L 2016 04. அல்லது ஆ)**

கதையாசிரியர், கம்பியூட்டர் எனும் இச் சிறுகதையை மிகவும் சிறப்பான மொழிநடையை கையாண்டுள்ளார் எழுதியுள்ளார்.

- எளிமையான சொற்பிரயோகத்தை கையாண்டிருத்தல்
- சிறுகதையில் தேவைப்படும் இடத்தில் தமிழ் மொழியுடன் ஆங்கில மொழி, வடமொழிச் சொற்களை பயன்படுத்தியிருத்தல்.
(ஆங்கிலம் - தியேட்டர், கவுண்டர், பேப்பர், ட்ரபிள்,. வடமொழி - பாஷை, ஸ்ரீராம், சூட்சுமம், காருண்யம்)
- சில இடங்களில் ஆங்கிலச்சொல்லை அப்படியே பயன்படுத்தி இருக்கின்றமை (give me a mega byte, Press any key to enter)
- உவமைத் தொடர்களை சிறுகதையில் அதிகளவில் பயன்படுத்தியிருத்தல்
- நகைச்சுவை சார்ந்த விடையங்களை சிறுகதையில் அதிகம் இணைத்திருத்தல்
- இலக்கியக் காட்சிகளை இடையிட்ட ஞாபகமாக சிறுகதையில் இணைத்திருத்தல்

S.Rajkumar

(நளவெண்பா - இருதுபர்ணன் கதை, காளமேகப்புலவர் அனுபவம், பாக்குவெட்டியும் புலவரும் கதை

- நனவோடை கதைகளை சுவைபட இணைத்திருத்தல் (அமரிக்க நண்பரும் தூண்டிலும், வெலிங்டன் தியேட்டர் கதை, செவக்கொழுந்துக்கு வண்டி கட்டி வேட்டி வாங்க போன கதை)
- உரையாடல் பாங்கில் பேச்சு வழக்கு சொற்களை இணைத்திருத்தல். (இஞ்ச, ஒண்டும்)
- வர்ணனைகள், உவமையணி என்பவற்றை பயன்படுத்தியிருத்தல் (முட்டியில் கள்ளுப் பொங்குவது போல, அம்மி பொளிவது போல, வண்ணத்துப் பூச்சி பறப்பது போல)
- யாழ்ப்பாணப் பேச்சுவழக்குச் சொற்களை அதிகளவில் கையாண்டிருத்தல்
- சிறிய சிறிய வாக்கியங்களோடு கதையை நகர்த்திச் சென்றிருத்தல்
- கதையிலே கதாபாத்திரங்களுக்கிடையில் உரையாடல் தன்மையை கையாண்டிருத்தல்
- கதையாசிரியர் தாமே கதைசொல்லியாக சிறுகதை முழுவதும் இழையோடுதல்
- காலத்திற்கு ஏற்ற வகையில் உலகளாவிய தமிழ் வாசகர்களை கருத்திற்கொண்டு, தலைப்பிடப்பட்டமை
- சிறந்த மொழியாளுகையை காணலாம்
    - **“எமன் கையில் பட்ட பாடு பட்டேன்**” - மிகவும் துன்பப்பட்டேன்
    - **“அவருடைய கெமிஸ்ரி எனக்கு சரிவரும் போல் தோன்றியது”**- அவருடைய குணாம்சங்கள் எனக்கு ஏற்றது
    - **“எனது வீடே ஒரு விஞ்ஞானத்துள்ளலாக மாறி வேகமாக முன்னேறியது**”- எல்லோரும் கம்பியூட்டருக்கு பழக்கப்பட்டிருந்தமை
    - **“இவ்வளவு நாளும் என் கதையை தன் வயிற்றில் வைத்து இரை மீட்டுத்தந்துள்ளது”-** சேமிப்பில் இருந்து மீட்டுத்தந்தது

S.Rajkumar

## கடந்த கால வினாக்கள்

**17. " எமிரோவோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்"**

**அ. இக்கூற்று இடம்பெற்ற சிறுகதை யாது?** **( O/L 2017 01. II )**

கம்பியூட்டர் சிறுகதை

ஆ. இக்கூற்று யாருடைய கூற்று.

காளமேகப்புலவரின்

**01." நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா.."** **( O/L 2016 01. VII )**

அ. தலபுராணம் என்பதன் கருத்து யாது?

தலம் ஒன்றின் மகிமையை, பெருமையை பற்றி கூறப்படுவது.

ஆ. தலபுராணம் என்பது இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் பற்றிய முழு விபரமும் தெரிந்தவர்

**10. " இந்தப் பைல் இஞ்ச எப்பிடி வந்தது..."** **( O/L 2018 01. IX )**

அ. பைல் என்பதன் தமிழ் வடிவம் யாது?

கோவை

ஆ. "இஞ்ச எப்பிடி" எனும் சொற்றொடரின் எழுத்து வடிவம் யாது?

இங்கு எப்படி அல்லது இங்கே எப்படி

**12. 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்..** **( O/L 2019 01. IX )**

அ. இதில் இடம்பெற்றுள்ள பிரபந்தம் எது?

பரணி

ஆ. உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

உச்சரித்தல்/ மனப்பாடம் செய்தல்

**அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல எனத்தொடங்கும் பந்தியில்**
**( O/L 2019 02. V )**

அ. கம்பியுட்டரை இலகுவாக பயன்படுத்துவதற்கு கதாசிரியர் கையாண்ட உத்தியை எவ்வாறு விபரிக்கின்றார்.

தளத்தினை பகுதி பகுதியாகபிரித்து தங்களது கோவைகளை இலகுவாக சேமிப்பதும் எடுப்பதுமாக இலகுவாக செய்தனர்

ஆ. "சூட்சுமங்களையெல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத்தொடங்கியது" என்பதனால் விளங்கிக்கொள்ளக கூடியது யாது?

கணிப்பொறியில் தமக்கு பரீச்சயம் ஏற்படட்டு தெரியாத விடயங்களை தெரிறந்து கொள்ளக்கூடியதாக இருந்தது

**07. கதாசிரியரின் கம்பியூட்டர் பற்றிய விபரிப்பு பற்றி கூறுக.** **( O/L 2016 04. அல்லது அ)**

**13. சிறுகதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.?**
**( O/L 2016 04. அல்லது ஆ)**

**11. எழுத்தாளரையும் அவரது குடும்பத்தையும் கம்பியூட்டர் அன்னியோன்னியம் ஆக்கிய விதம் யாது?**
**(O/L 2018 03. அல்லது அ,)**

**அதனை நகைச்சுவையாக சித்தரிக்கும் விதத்தினை விளக்குக.**
**(O/L 2018 03. அல்லது ஆ)**

**11. கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவம் இன்மை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?**
**( O/L 2020 07.அ)**

**அமெரிக்காவில் தூண்டில் கடைக்கு போன போது ஏற்பட்ட அனுபவம்** **( O/L 2020 07.ஆ)**



S.Rajkumar